ஆலந்தூர் மின் வாரிய அலுவலகத்தில் சிறு குறு தொழில் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆர்.எம்.யூ. பிரேக்கர் என்ற புதிய தொழில் நுட்ப அமைப்பை திறந்து வைத்தார்.

திருவொற்றி 14 வது வட்ட பொருளாளர்

மறைந்த டி.ஆர்.சுரேஷ் குடும்பத்திற்கு ரூ.2 இலட்சம் நிதி!

மாநில மீனவரணி துணைத் தலைவர் கே.பி.சங்கர் வழங்கினார்!

சென்னை, மே.4

திருவொற்றியூரில் மறைந்த 14 வது வட்ட கழக பொருளாளர் டி.ஆர்.சுரேஷ் அவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் இரண்டு லட்சம் வழங்கி மகனின் மருத்துவ செலவு உட்பட இரண்டு குழந்தைகளின் கல்வி கட்டணத்தையும் மாநில மீனவரணி துணைத் தலைவரும், திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ஏற்றார்.

திருவொற்றியூர் சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட 14 வது வட்ட கழக பொருளாளர் டி.ஆர்.சுரேஷ் அவர்கள் எதிர்பாராத விதமாக 20.04.2023 அன்று அகால மரணம் அடைந்தார்.

அதனை தொடர்ந்து 29.04.2023 அன்று 9 ஆம் நாள் நினைவு நாள் மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி சலவைத்துறையில் அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

14 வது வட்ட கழக நிர்வாகிகள் பி.புளூட்டஸ் செல்வதாஸ், எம்.பிரேம், பி.கார்த்திக், எச்.வாசுகி, எம்.கெங்கன், ஆர்.வேலு, கே.விமல், வி.அசோக்குமார் ஆகியோர் வரவேற்புரையில் கே.பி.சொக்கலிங்கம் முன்னிலையில், மாமன்ற உறுப்பினர் பானுமதி சந்தர் தலைமையில் மாநில மீனவரணி துணைத்தலைவர் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் படத்தை திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார்.

மேலும் குடும்பத்தினருக்கு கே.பி.சங்கர் ஆறுதல் கூறுகையில், குடும்பத்தில் ஒருவரின் இழப்பால் அவரின் குடும்பம் துயரத்தில் வாடும் போது அந்த குடும்பத்திற்கு உதவுவது நமது கடமை என்பதை உணர்ந்து இரு குழந்தை களின் கல்வி செலவை ஏற்பதாகவும், உடல் நலம் சரி இல்லாமல் உள்ள அவரின் மகனின் மருத்துவ செலவை ஏற்பதாகவும் தெரிவித்து என்றென்றும் அந்த குடும்பத்திற்காக திருவொற்றியூர் திராவிட முன்னேற்ற கழகம் துணை நிற்கும் என்று தெரிவித்து ரூபாய் இரண்டு லட்சத்தை வழங்கினார்.

நினைவஞ்சலி நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன், பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன் வட்டச் செயலாளர்கள் ஆர்.சந்தர், ஏகா. கார்த்திகேயன், தலைமை கழக பேச்சாளர்கள் சிவாஜிகிருஷ்ணமூர்த்தி, வா.கருணாநிதி, போட்டோ செந்தில் மாவட்ட பிரதிநிதிகள் கே.கார்த்திகேயன், பி.எஸ். சைலஸ், அப்துல்சலீம், எல்.எத்திராஜ், கழக தோழர்கள் ஆர்.பிரகாஷ் சிவா, கே.தேசிங்கு, எம்.தயாநிதி, பி.விமல்தாஸ், எஸ்.கே.இளங்கோ, டைலர் மணி, எஸ்.செல்வம், குமரன், வழக்கறிஞர் தன்ராஜ், வினோத், கே.ரமேஷ், எம்.ராம்,

தமிழர் பாரதம் தேவராஜ், கவிஞர் மகிழன், பா.பாலஉமாபதி, எம்.எல்.வேலன், வாழப்பாடி செந்தில், ச.விஜயராகவன், எம்.டி.சி சண்முகம், போட்டோ கண்ணன், தேரடி நந்தா, புலி விநாயகம், இரா.கணேசன், ஆரோக்கியதாஸ் புதியவன், டி.இ.பரணி குமார், டிக் டாக் சிவக்குமார், அசோக்குமார், ராஜ்குமார், கஜா, தட்சணாமூர்த்தி ராஜி, ராஜா, சத்யராஜ், தனசேகர், பிரபாகர பாண்டியன், டைலர் பாபு, பந்தய சேகர், மைக்கேல், சூரிய நாராயணா, சுரேஷ், கொள்கைமணி, ரஜினி, நேவி ராஜ் விமல், ஹேமலதா, புனிதா, சந்திரலேகா,

சலவை தொழிலாளர் சங்க மாநிலத் தலைவர் சேலம் டி.பாலு, செயலாளர் ஜி.எஸ்.அண்ணாமலை, கொள்கை பரப்பு செயலாளர் ஏ.கே. தனபால், காலடிப் பேட்டை சலவை தொழிலாளர் சங்கத் தலைவர் மாசிலாமணி, செயலாளர் திவாகர், பொருளாளர் உதயகுமார், துணை செயலாளர் பி.விஜயன் மற்றும் கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

பகுதிப் பிரதிநிதி ஏ.ராஜேந்திரன் ஏற்பாட்டில் !

திருவொற்றியூர் தொகுதியில் தண்ணீர் பந்தல்!

கே.பி.சங்கர் எம்.எல்.ஏ திறந்து வைத்தார்.

சென்னை மே:4

திருவொற்றியூர் அன்னை சிவகாமி நகரில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களின் வேண்டுகோள் கிணங்க நீர் மோர் பந்தலை 3வது வட்டக் கழக பகுதி பிரதிநிதி ஏ.ராஜேந்திரன் ஏற்பாட்டில் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மீனவர் அணி மாநில துணைத் தலைவர் கே.பி.சங்கர் திறந்து வைத்து பொதுமக்களுக்கும் தூய்மை பணியாளர்களுக்கும் இளநீர், தர்பூசணி, கிரிணி பழம், வெள்ளரி, ஐஸ்கிரீம், மோர் மற்றும் குளிர்பானங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் வி.இராமநாதன், 5வது வட்ட கழகச் செயலாளர் கே.பி.சொக்கலிங்கம் எம்.சி,

வட்டக் கழக செயலாளர்கள் மு.மாணிக்கவேலன், ஏகா. கார்த்திகேயன், மாவட்ட பிரதிநிதிகள் பி.எஸ்.சைலஸ், கே.கார்த்திகேயன், திருவொற்றியூர் தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் பா.பாலஉமாபதி, தொ.மு.ச திட்டச் செயலாளர் கே.தேசிங்கு, 14வது வட்ட துணைச் செயலாளர் எம்.பிரேம்,

பகுதி மீனவர் அணி அமைப்பாளர் எஸ்.செல்வம், பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் நிர்மல்தாஸ், கிழக்கு பகுதி மீனவர் அணி துணை அமைப்பாளர் எம்.எல்.வேலன், எம்.ராம், மற்றும்

கே.ராமச்சந்திரன், வி.கே.ஏழுமலை, எம்.ரகுநாதன், கொள்கைமணி, எஸ்.ஜெயராம், ஏ.தனபால், வி. தண்டாயுதபாணி, கே.வெங்கடேஷ், சி.முனியாண்டி, எம்.மணி, எஸ்.பிரபு, குமார், எம்.அருணாச்சலம், எம்.தயாநிதி, எம்.ரமேஷ், இரா.கணேசன், எஸ்.விஜயராகவன், அன்பு, மகிழன், மூ.ராம் குமார் உள்ளிட்ட கழகத் தோழர்களும் அணி நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

மாதவரம் 16வது வட்டத்தில் முதல்வர் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. பங்கேற்று நல உதவிகள் வழங்கினார். பகுதீச் செயலாளர் புழல் நாராயணன், சிவபிரகாஷ், கண்ணப்பன் உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.

மனித நேயத் திருநாள் : அரிகுமார் தலைமையில் எஸ்.முரளி முன்னிலையில்

துறைமுகம் 57 அ வட்டத்தில் 300 பேர் பங்கேற்ற மாபெரும் கோலப்போட்டி!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு பரிசுகள் வழங்கினார்!

சென்னை, மே 4 -

சென்னை கிழக்கு மாவட்டம் துறைமுகம் மேற்கு பகுதி 57 அ வட்டத்தில் 29.04.23 அன்று தங்க சாலை மஹாசக்தி ஓட்டல் அருகில் மக்கள் முதல்வரின் மனித நேயத் திருநாள் திராவிட மாடல் - 69 "பெண்கள் கோலம் பெருமைகள் ஆகும்" 300 மகளிர் கலந்து கொண்ட மாபெரும் கோலப்போட்டி முன்னாள் பகுதி பிரதிநிதி ஜே.அரிகுமார் தலைமையில் நடைபெற்றது.

பகுதி செயலாளர் எஸ்.முரளி முன்னிலை வகித்தார். கோலப்போட்டியில் வெற்றி பெற்ற 300 மகளிர்களுக்கு 3 முதல் பரிசாக அரவை இயந்திரம், 3 இரண்டாம் பரிசாக மிக்ஸியும் 3 மூன்றாவது பரிசாக எலக்ட்ரிக் இன்டெக்ஸ்டன் ஸ்டவ்வும் பரிசாக சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் இந்து சமயம் அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். கோலப் போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மகளிர்களுக்கும் எவர்சில்வர் டிரம் பரிசு வழங்கப்பட்டது.

விழாவில் கழக மருத்துவர் அணி தலைவர் கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி., தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.விஜயகுமார், மாவட்ட துணை செயலாளர் ஜி.எம்.தேவன், பொதுக்குழு உறுப்பினர் ஆர்.கலைச்செல்வி, ஐந்தாவது மண்டல குழு தலைவர் பி.சீராமுலு, பகுதி அவைத் தலைவர் மே.ஜனார்தனன், பகுதி துணை செயலாளர்கள் கே.ஆர்.அபரஞ்சி, கே. சரஸ்வதி எம்.சி. ஆர்.ராஜேஷ் ஜெயின் எம்.சி. வட்ட கழக செயலாளர்கள் எம்.ஜெய்சங்கர், ஜி.ராமமூர்த்தி, ஆர்.ரவிசந்திரன், டி.சதிஷ்குமார், டி.ராஜா, எம்.பரத்குமார், ஆ.நா.பார்த்திபன், மாவட்ட பிரதிநிதிகள் டி.போஸ், டி.எஸ்.சேகர், லண்டன் கே.முருகன், எம்.வி.ஆர்.சரவணன், நா.ரஞ்சித்விஜயாலயன், பூக்கடை முரளி,

அமைப்பு சாரா தொ.மு.ச. மாவட்ட பொருளாளர் எல்.சம்பத்குமார், அணிகளின் மாவட்ட அணிகளின் அமைப்பாளர் பி.விஜயகுமார், வழக்கறிஞர் கோபிகிருஷ்ணன், துணை அமைப்பாளர்கள் பூங்கா நகர் கண்ணன், வினோத் கோத்தாரி,

நா.மோகன், பி.செந்தில் குமார், வட்ட நிர்வாகிகள் கே.ஜி.துளசிராமன், சி.காந்தி, டி.வேலு, கே.பவானி, ஆவின் சந்திரசேகர், பா.முத்துகுமார், தேவகானம்ராஜா கேபிள் சங்கர், பிண்டுஜெயின் இளைஞர் அணி வட்ட அமைப்பாளர் எஸ்.ராஜு, துணை அமைப்பாளர்கள் எம்.உதயா, புலிமுருகன், பகுதி மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் ஆனந்தி, பாக முகவர்கள் எஸ்.கே.பாரூக்சுல்தான், இ.லோகு, சாய்பவன், வேலாயுதம், நாராயணசாமி, டி.சேகர், நாகலட்சுமி, வருண், பி.எல்.முரளி மற்றும் P.அசோக்குமார், அஞ்சையா, ஜி.டி.நரசிம்மா, யாதகிரி, தீபன், லிங்கேஷ், கிஷோர், தாரா, ரதி தேவி, பவானி, வீரா, பாஸ்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தங்கசாலை மேம்பாலம் அருகில் அமைக்கப்பட்டுள்ள

புதிய பூங்காவுக்கு 'கலைஞர் நூற்றாண்டு பூங்கா' - என பெயர் சூட்டக்கோரி

சென்னை மாநகராட்சிக்கு - வடசென்னை தமிழ்ச்சங்கத் தலைவர் எ.த.இளங்கோ வேண்டுகோள்!

சென்னை, மே.4-

தங்கசாலை மேம்பாலம் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பூங்காவுக்கு 'கலைஞர் நூற்றாண்டு பூங்கா' என பெயர் சூட்டக்கோரி வடசென்னை தமிழ்ச் சங்கத் தலைவர் எ.த.இளங்கோ சென்னை மாநகராட்சியில் விண்ணப்பம் அளித்து வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

'நவீன தமிழ்நாட்டின் தந்தை' என போற்றப்படும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா ஜூன் மாதம் முதல் தமிழ்நாடு அரசின் சார்பில் கொண்டாடப்பட உள்ள நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் எண்.5, வார்டு எண்.53ல் தங்கசாலை மேம்பாலம் அருகில் அமைக்கப்பட்டுள்ள இன்றும் திறக்கப்படாமல் உள்ள புதிய பூங்காவுக்கு 'கலைஞர் நூற்றாண்டு பூங்கா' என பெயர் சூட்ட வேண்டுமென வடசென்னை மக்கள் சார்பிலும், வடசென்னை தமிழ்ச் சங்கம் சார்பிலும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை மாநகராட்சியில் அவர் அளித்த விண்ணப்பத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

திருறொற்றியூர் 14 வது வட்டக் கழகப் பொருளாளர் மறைந்த டி.ஆர். சுரேஷ் குடும்பத்திற்கு மாநில மீனவரணி துணைத் தலைவரும் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் ,ரூபாய் இரண்டு லட்சம் நிதி உதவியினை வழங்கியதோடு, அவரது இரு பிள்ளைகளின் கல்வி செலவையும், மருத்துவ செலவையும் ஏற்பதாக டி.ஆர்.சுரேஷ் குடும்பத்தாரிடம் உறுதியளித்தார்.